593

593

# A Selection of HYMNS AND LYRICS.



ST. PAUL'S CHURCH,

SATTUR.

1936.

8 - MAR 1938
MADRAS

20602

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - MAY 1938
MADRAS

# குருத்தோலை ஞாயிறு.

1 7676 D. (60)

குழந்தைகள், பாலகர் வாயினால் துதியைப் பூரணமாக்கினீர்.

*f* ஓசன்னா பாலர் பாடும்
ராஜாவாம் மீட்பர்க்கே
மகிமை, புகழ், கீர்த்தி
எல்லாம் உண்டாகவே.

கர்த்தாவின் நாமத்தாலே
வருங்கோமானே, நீர்
தாவீதின் ராஜ மைந்தன்
துதிக்கப்படுவீர். *f*—ஓசன்னா

உன்னத தூதர் சேனை
விண்ணில் புகழுவார்;
மாந்தர், படைப்பு யாவும்
இசைந்து போற்றுவார். *f*—ஓசன்னா

உம் முன்னே குருத்தோலை
கொண்டேகினோர் போலும்,
மன்றாட்டு, கீதம், ஸ்தோத்திரம்
கொண்டும்மைச் சேவிப்போம். *f*—ஓசன்னா

நீர் பாடுபடும் முன்னே
பாடினார் யூதரும்;
உயர்த்தப்பட்ட உம்மை
துதிப்போம் நாங்களும். *f*—ஓசன்னா

அப்பாட்டைக் கேட்ட வண்ணம்
எம் வேண்டல் கேளுமே;
நீர் நன்மையால் நிறைந்த
காருணிய வேந்தரே. *f*—ஓசன்னா

ஆமென்.

## 2 L. M. (61)

முன் நடப்பாரும், பின் நடப்பாருமாகிய திரளான ஜனங்கள் தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று ஆர்ப்பரித்தார்கள்.

*f* தயாள இயேசு தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
*mf* வெள்ளோலை தூவி கூட்டத்தார்
ஓசன்னா என்றார்ப்பரிக்கிறார்.

*p* தாழ்வாய் மரிக்கத் தேவரீர்
*mf* மாண்பாய்ப் பவனி போகிறீர்!
மரணம் வெல்லும் வீரரே,
உம் வெற்றி தோன்றுகின்றதே.

விண்ணோர்கள் நோக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
வியப்புற்றே அம்மோக்ஷத்தார்
அடுக்கும் பலி பார்க்கிறார்.

வெம் போர் முடிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
தம் ஆசனத்தில் ராயனார்
சுதனை எதிர் பார்க்கிறார்.

*p* தாழ்வாய் மரிக்கத் தேவரீர்
*mf* மாண்பாய் பவனி போகிறீர்!
*p* நோ தாங்கத் தலை சாயுமே;
*f* பின் மேன்மை பெற்று ஆளுமே. ஆமென்.

---

## 3 (87)

1 தேவாசனப்பதியும் சேனை தூதரை விட்டு
தேவர் குலமாய் வருவதாரையா—இவர்
தேவனுரைப்படி பாவ வினைப்படி
ஏவை மனப்படி ஆவல் மிகப்படி
வணங்கும் ஜெந ஜோதிப் பொருள் தானையா

2 முன்னணி பின்னணியில் ஓசன்னா ஓசன்னாவென
ஓர் மறியின் மீதில் வார தாரையா—இவர்
உத்தம நேசனும் சத்தியபோசனும்
பக்தரின் வாசனும் நித்திய ஈசனும்
உன்னதத்தின் மேன்மைத் தெய்வம் தானையா.

3 வழியில் மரக்கிளைகள் வரிசைய தாய்ப் பரப்ப
வஸ்திர மீதில் வருவ தாரையா— இவர்
வல்லவ ராங்குரு சொல் தவ ராக்குரு
நல்லவ ராங்குரு துல்லிப சற்குரு
வாமிகுத்த தேவ சுதன் தானையா.

4 சீயோன் குமாரி யிடம் நேயம தாகத் தேடி
சிங்கார மாய் வருவ தாரையா—இவர்
சீருற் றதிபனும் பேர்பெற் றிறைவனும்
பாருற் றதிபனும் வேருற் றெழுந்தனும்
ஜீவ வழி சொல்வ ரிவர் தானையா.

5. பாலர் துதித்திடவும் ஞாலம் மதித்திட்வும்
பாவலருடன் வார தாரையா—இவர்
பசியற்றி ருந்தவர், புசிப்பற்றி ருந்தவர்
வசை பெற்றி ருந்தவர், அசைவற்றி ருந்தவர்
பாவ விமோ சன ராஜன் தானையா.

6 எருசலேம் வீதி வழி பெரிய திரளுடனே
குருத்தோலை வீசி வார தாரையா—இவர்
அரியை பவமற, பெருமை நிதந்தர
கிருபை துரந்தர, அருமை நிரந்தர
ஏசுக் கிறிஸ் தென்ற துரை தானையா.

---

**4** பல்லவி (88)

ஓசன்னா பாடுவோம் ஏசுவின் தாசரே
தாவீதின் குமாரனுக்கு உன்னதத்தில் ஓசன்னா

சரணங்கள்

1

முன்னும் பின்னும் சாலேம்நகர் சின்னப்பாலர் பாடினர்
அன்று போல இன்றும் நாமும் அன்பாய் துதி
பாடுவோம்.

2

சின்னமறி மீதிலேறி அன்பர் பவனி போனர்
இன்னும் என் அகத்திலவர் வந்து அரசாளுவார்.

3

பாவமதைப் போக்கவும் இப் பாவியைக் கை தூக்கவும்
பாசமுள்ள ஏசையா பவனியாகப் போகிறார்.

4

பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர் வீணையோடு பாடி பாதமுத்தி செய்குவோம்.

5

குருத்தோலை ஞாயிறில் நம் குரு பாதம் பணிவோம்
திரு அருள் பெற்று நாமும் த்ரியேகரைப் போற்று
வோம்.

---

**5** பல்லவி, (89)

பவனி செல்கின்றார் ராஜா—நாம்
பாடிப் புகழ்வோம் நேசா.

அனுபல்லவி.

அவனி தனிலே மறி மீதேறினர்
அனந்தம் பரமானந்தம்— பவனி

## சரணங்கள்

1 எருசலேமின் நிதியே—சார்
என்றுந் தொழுஞ் சீயோன் பதியே
அருகில் நின்று அனைவர் போற்றும்
அரசே எங்கள் சிரசே— பவனி

2 பன்னிருவர் ஆடை தரித்து—நின்று
பாங்காய் வஸ்திரம் விரித்து
நன்னயம் சேர் மனுவின் சேனை
நாத கீதம் ஓத— பவனி

3 குருத்தோலைகள் பிடிக்க—பாலர்
கும்பல் கும்பலாக நடிக்க
பெருத்த தொனியாய் ஓசன்னா வென்று
போற்ற கீத மேற்ற— பவனி

4 பெரியோர்கள் பலர் தடுக்க—நல்ல
வறியோர் பலர் அடுக்க
தெரியாதோரும் பரிசுத் தாவியால்
தேட அருள் கூட— பவனி

5 வேத பாரகர் மயங்க—அருள்
வேத சாஸ்திரம் இலங்க
பாதகமதைத் தவிர்த்து ஜெயித்த
பாலன் தேவ சீலன்— —பவனி

# பெரிய வெள்ளிக்கிழமை.

6 L. M. (72)

தேவரீர் அடிக்கப்பட்டு...எங்களை தேவனுக்கென்று
உம்முடைய இரக்கத்தினாலே மீட்டுக்கொண்டீர்.

*p* துக்கங்கொண்டாட வாருமே,
பாரும்! நம் மீட்பர் மரித்தார்;
திகில் கலக்கங் கொள்ளுவோம்;
*pp* இயேசு சிலுவையில் மாண்டார்.

போர்வீரர், யூதர் நிந்தித்தும்
மா பொறுமையாய்ச் சகித்தார்;
நாமோ புலம்பி அழுவோம்;
*pp* இயேசு சிலுவையில் மாண்டார்.

*p* கை, காலை ஆணி பீறிற்று,
தவனத்தால் நா வறண்டார்;
கண் ரத்தத்தாலே மங்கிற்றே;
*pp* இயேசு சிலுவையில் மாண்டார்.

நார்க்காய்த் திவ்விய அன்பினால்
மா மௌனமாய் மன்றாடினார்;
நல் ஏழு வார்த்தை உரைத்து,
*pp* இயேசு சிலுவையில் மாண்டார்.

*p* அவர் விலாவின் உதிரம்
திவலையாய் நம்மேல் விட்டார்;
அவர் பாதத்தைப் பணிவோம்;
*pp* இயேசு சிலுவையில் மாண்டார்.

*p* ஆ யேசு ஸ்வாமீ, தாசர்க்கு
பெருகிப் பாய்ந்திடுங் கண்ணீர்,
உருகும் நெஞ்சும் ஈயுமே.
*pp* நீர் சிலுவையிலே மாண்டீர். ஆமென்.

7 **7676** (73)

பிதாவே, இவர்களுக்கு மன்னியும்;
தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே.

*p* கூர் ஆணி தேகம் பாய
மா வேதனைப்பட்டார்;
*mf* 'பிதாவே, இவர்கட்கு
மன்னிப்பீயும்' என்றார்.

*p* தம் ரத்தம் சிந்தினோரை
நல் மீட்பர் நிந்தியார்;
*mf* மா தேவ நேசத்தோடு
இவ்வாறு ஜெபித்தார்.

*p* எனக்கே அவ்வுருக்கம்
எனக்கே அச்செபம்,
அவ்வித மன்னிப்பையே
எனக்கும் அருளும்.

*p* நீர் சிலுவையில் சாக
செய்ததென் அகந்தை;
*pp* கடாவினேன், இயேசுவே;
நானுங் கூர் ஆணியை.

*p* உம் சாந்தக் கண்டிதத்தை
நான் நித்தம் இகழ்ந்தேன்;
*mf* எனக்கும் மன்னிப்பீயும்,
எண்ணாமல் நான் செய்தேன்.

ஆ, இன்பநேச ஆழி!
ஆ, திவ்விய உருக்கம்!
நிந்திப்போர் அறியாமல்
செய்பாவம் மன்னியும். ஆமென்.

## 8

பல்லவி (108)

சுவாமி இவர்க்கிதை மன்னியும் சுவாமி

### சரணங்கள்.

1 சுவாமியென அறியாமற் செய்தார்கள்
சற்றும் இரக்க மற்றே யிருந்தார்கள்.

2 தாங்கள் செய்வ தின்ன தென் றறியார்கள்
தற்பரனும்மை இங்காரறிவார்கள்.

3 முள் முடி சூட்டி எனைப் பழித்தார்கள்
மூங்கில் தடி கொண்டு மேலடித்தார்கள்.

4 நீசச் சண்டாளர் என் கண் கட்டினார்கள்.
நீ சொல்லிப் போடெனவே குட்டினார்கள்.

5 கன்னத் தடித்துத் தடிக்க வைத்தார்கள்
மன்னனே என்று பகடி செய்தார்கள்.

6 எந்தன் முகத்தினி லேதுப்பினார்கள்.
எத்தனையோ வார்த்தை கள் செப்பினார்கள்.

7 பொய்யான சாட்சிகளைக் கூட்டினார்கள்.
போதனை செய்து குற்றஞ்சாட்டினார்கள்.

8 வாதினாலே எனை அடித்தார்கள்
வாதை அநேகம் செய்தே முடித்தார்கள்.

9 பாதகம் செய்தவனை விடுத்தார்கள்
பாழ் மரத்தை என்மேல் சுமத்தினார்கள்.

10 கால்கரத் தாணி கடாவி வைத்தார்கள்
கள்ளர் நடுவில் மரிக்க வைத்தார்கள்.

11 வஸ்திரமெல்லாம் உரிந்து கொண்டார்கள்
கஸ்திப்படுத்தி வதைத்துக் கொன்றார்கள்.

---

## 9 10. 10. 10. 10. (74)

இன்றைக்கு என்னுடனேகூடப் பரதீஸிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

‘உம் ராஜியம் வருங்காலை, கர்த்தரே
அடியேனை நினையும்’ என்பதாய்
*p* சாகுங் கள்ளன் விஸ்வாச நோக்காலே
*mf* விண் மாட்சி கண்டு சொன்னான் தெளிவாய்.

அவர் ஓர் ராஜா என்று சொல்லுவார்
எவ்வடையாளமுங் கண்டிலாரே;
*p* தம் பெலனற்ற கையை நீட்டினார்;
முட்கிரீடம் நெற்றி சூழ்ந்து பீறிற்றே.

ஆனாலும், மாளும் மீட்பர் மா அன்பாய்
*p* அருளும் வாக்கு ‘இன்று என்னுடன்
மெய்யாய் நீ பதீஸிலிருப்பாய்’
*mf* என்பதுவாம்—விஸ்வாசத்தின் பலன்.

கர்த்தாவே, நானுஞ் சாகும் நோத்தில்
*p* ‘என்னை நினையும்’ என்று ஜெபித்தே,
*mf* உம் சிலுவையைத் தியானஞ் செய்கையில்,
உம் ராஜியத்தைக் கண்ணுறச் செய்யுமே.

*p* ஆனால், என் பாவம் நினையாதேயும்,
*mf* உம் ரத்தத்தால் அதைக் கழுவினீர்;
உம் திருச்சாவால் பாவமன்னிப்பும்
ரட்சிப்பும் எனக்காய்ச் சம்பாதித்தீர்.

*p* ‘என்னை நினையும்’; ஆனால், உமக்கும்
என்னால் உண்டான துன்பங் கொஞ்சமோ?
சிலுவை, நோவு, ரத்தவேர்வையும்,
சகித்த நீர், இவை மறப்பீரோ?

‘என்னை நினையும்;’ நான் மரிக்கும் நாள்,
*p* ‘நீயும் என்னோடு தங்குவாய் இன்றே
*mf* நற்பரதீஸில்’ என்னும் உம் வாக்கால்,
என் ஆவி தேர்ந்து மீளச் செய்யுமே.

ஆமென்

**10** பல்லவி (111)

இன்றைக் கென்னுடன் நீ பரதீசி லிருப்பாய்
இது மெய்யென்றீரே.

அனுபல்லவி

அன்று வலபாரிச கள்ளன் வேண்டுதல் மேவி
சிந்தை இரங்கினாற்போல் செய்யும் நான் படுபாவி—
[இன்

சரணங்கள்

1 திருமுகப் பிரகாசம் அருள அவன் பிழைத்தான்
செய்குவீர் சேய் எமக்கே
கிருபையின் மேற் கிருபை பெருகிட விழி பாரும்
மரண சமயமவர் மலர்முகம் ஒளி சாரும்— இன்

2 ஆயுள் காலமெல்லாம் அநியாயம் செய்தவன்
அடைந்ததே ஆச்சரியம்
பாயு மன்பு பகவான் ஏசு கிருபையினல்
பரம வாழ்வு அடைந்த தவம் யாரும்பெறுவரோ—
இன்.

3 வள்ளல் ஏசு ஓரே தெய்வ மெனவே கண்டு
வணங்கியோர் மனு விண்டான்
கள்ளன் என்னையுமே நின் ராஜ்ஜியத்தில் நினையும்
கர்த்தனே என்று சொல்லிக் கருணை வேண்டி
நிற்கவே—இன்

---

**11** 887 D. (75)

ஸ்திரியே அதோ, உன் மகன்... அதோ, உன் தாய்.

சிலுவையைப் பற்றி நின்று
துஞ்சும் மகனைக் கண்ணுற்று,
விம்மிப் பொங்கினர் ஈன்றாள்;
தேவமாதா மயங்கிஞர்,
சஞ்சலத்தால் கலங்கினர்;
பாய்ந்ததாத்துமாவில் வாள்.

*p* பாக்கியவதி மாதா, உற்றூர்
சிலுவையை நோக்கிப்பார்த்தார்;
அந்தோ, என்ன வேதனே!
ஏகபுத்திரனிழந்து,
துக்கசாகரத்தில் ஆழ்ந்து,
சோகமுற்றனர் அன்னே.

*p* இணையிலா இடருற்ற
அன்னே அருந்துயருற
யாவரும் உருகாரோ?
தேவமைந்தன் தாயார் இந்த
துக்கபாத்திரம் அருந்த
மாதாவோடழார் யாரோ?

*p* தம் குமாரன் காயப்பட,
முட்கிரீடஞ் சூட்டப்பட
இந்த நிந்தை நோக்கினுர்;
நீதியற்ற தீர்ப்புப்பெற,
அன்பர், சீஷர் கைவிட்டோட,
அவர் சாகவுங் கண்டார்.

அன்பின் ஊற்ரும் இயேசு ஸ்வாமீ,
உமதன்னேக்குள்ள பக்தி
என்றன் நெஞ்சில் ஊற்றிடும்;
அன்பினுல் என் உள்ளம் பொங்க,
அனல் கொண்டகம் உருக
அருளேக் கடாட்சியும். ஆமென்.

---

**12** பல்லவி. (98)

என் செய்வேன் மகனே நானிதற்கோ வுனேப் பெற்
[றெடுத்தேன்
இறையோ பவ சோதனேயோ—இபபடி முடிந்திட

சரணங்கள்.

1

ஐயையோ பாலகனே அதிசயமாய் வந்துதித்தாய்
அருமையாய் நான் வளர்த்து இங் கவதிக்குள் ளாகினை
[யோ
அருமைத் திரு மைந்தனே வயிறெரியுதையோ — என்

2

பூதருந்தன் கன்னத்தி லடிக்க நீர் துடி துடிக்க
கண்ணினால் பார்த்திருக்கக் கள்ளியோ நானிருக்க
கருவாய் மனுவாய் எனில் வந்துதித்தவரோ— என்

3

பாவிகளைத் தேற்ற பாவக்கறை அகற்ற
படுகிற பாடுகளைப் பார்ப்பேனோ என் மகனே
பலமாய் உறமாய் அடிகள் விழுகுதையோ— என்

4

கள்ளரோ டடிபடவும் கனத்த குரு சேறிடவும்
கன்னத்தில் அடி படவும் காலமோ என் மகனே
கனமாய் தனமாய் கரத்திலெடுத்தேனே— என்

5

நேசன் யோவானையுமே நியமித்தாய் என் மகனே
நின்னையும் நான் நினைக்க நெஞ்சமோ ஆறுதில்லை
நினைவே கனவே நிலையற் றலைவனே—— என்

---

**13** 777777 (76)

என் தேவனே, என் தேவனே,
ஏன் என்னைக் கைவிட்டீர்.

துயருற்ற வேந்தரே,
சிலுவை ஆசனரே
*p* நோவால் வாடும் முகத்தை

இருள் திரை மூடிற்றே;
எண்ணிறந்த துன்பம் நீர்
*pp* மௌனமாகச் சகித்தீர்.

*p* பலியாக மரிக்கும்
வேளை வரும் அளவும்,
மூன்று மணி நேரமாய்,
துணையின்றி மௌனமாய்
பேரிருளில் தேவரீர்
*pp* பேயோடே போராடினீர்.

*p* தேவ ஏக மைந்தனுர்,
அபிஷேக நாதனுர்
*pp* 'தேவனே, என் தேவனே,
என்னை ஏன் கைவிட்டீரே'
*mf* என்றுரைக்கும் வாசகம்
கேள், இதென்ன அற்புதம்!

*p* துயர் திகில் இருண்டே
சூழும்போது, தாசரை
கைவிடாதபடி நீர்
கைவிடப்பட்டிருந்தீர்;
இக்கட்டில் சமீபம் நீர்
என்றிதாலே கற்பிப்பீர். ஆமென்.

---

## 14 (118)

1 என் தேவனே, என் தேவனே,
என்னைக் கைவிட்டெங்கே சென்றீர் கோனே?—
வன்கொலைஞரிஷ்டத்திற்கு [இந்த
என்னை ஒப்புக்கொடுத்ததென்ன?—தேவே.

2 தொல்லுலகின் பாவப் பாரம்
அல்லோல கல்லப்படுத்தி மிகவாய்—கொடும்
வல்லிருள் என் கண்ணை மூட
நல்லாய் முகம் மறைத்ததென்ன?—கோவே

3 தீயர் தமைத் திருக்கரத்தால்
நேயமுடன் அணைத்தேற்று ரக்ஷித்து —நல்
ஆயன் மந்தை சேர்த்திடவோ
மாயமாயெனைக் கை விட்டாய்?—தேவே

4 நோய் நீங்கித் தன் சேய் சுகிக்க
தாய் மருந்தருந்தி பத்யம் காப்பாள்—யானும்
பாவியை நீதிமானுக்க
பாவிபோற் கைவிடப்பட்டேனோ?—கோவே

5 வித்தொன்று செத்திடினது
பத்தாய் நூறாய் பலன் தருமாப்போலே—யான்
செத்திடின் பொல்லார் பிழைத்து
புத்ரராகவோ கைவிட்டாய்?—கோவே

6 பாவத்தாலுண்டாம் மரணம்
யாவரையும் விழுங்கிப் போடாதிருக்க—தீய
பாவத்தை வென்றே னவ்வாறு
சாவை வெல்லவோ கைவிட்டாய்?—கோவே.

---

15 8886. (77)

தாகமாயிருக்கிறேன்.

அருவிகள் ஆயிரமாய்
பாய்ந்து இலங்கிடச் செய்வார்,
அனைத்தும் ஆள்வோர், (p) 'தாகமாய்
இருக்கிறேன்' என்றார்.

வெம் போரில் சாவோர் வேதனை,
வியாதியஸ்தர் காய்ச்சலும்,
p குருசில் கூறும் இவ்வோரே
ஓலத்தில் அடங்கும்.

அகோரமான நோவிலும்
மானிடர் ஆத்துமாக்களை
வாஞ்சிக்குந் தாகம் முக்கியம்;
p என் ஆன்மாவும் ஒன்றே.

*p* அந்நாவறட்சி, தாகமும்
என்னால் உற்றீர், பேர் அன்பரே,
என் ஆன்மா உம்மை முற்றிலும்
வாஞ்சிக்கச் செய்யுமே. ஆமென்.

---

## 16 (119)

1 தாக மானீரோ ஏசு தற்பரா சுவாமி
தாரணியோர் மேல் கடுந்தாகமானீரோ?

2 நித்திய ஜீவ நதி நீரே யாயினும்
நீசக் குருசில் நிற்கத்தாக மானீரோ.

3 நாவும் வறண்டு மேல் நாவோடே வொட்டி
யாவும் இருண்டுவாத் தாகமானீரோ.

4 கடற்காளானில் கடுங் காடியோ உமக்
கான பானமோ நல்ல கர்த்தனே சுவாமி

5 பாவி அடியேன் உம்மில் பாசம் வைத்திட
பானமாகவே தாக நாட்டங் கொண்டீரோ.

---

## 17 S. M. (78)

பூரண ஜீவியமே!
தேவாசனம் விட்டு,
தாம் வந்த நோக்கம் யாவுமே
இதோ முடிந்தது!

பிதாவின் சித்தத்தை
கோதற முடித்தார்;
*p* தொல் வேத உரைப்படியே
கஸ்தியைச் சகித்தார்.

*p* அவர் படாத துக்கம்
நமக்கு இல்லையே;
உருகும் அவர் நெஞ்சிலும்
நம் துன்பம் பாய்ந்ததே.

*p* முள் தைத்த சிரசில்
நம் பாவஞ் சுமந்தார்;
*mf* நாம் சுத்தராகத் தம் நெஞ்சில்
நம் ஆக்கினை ஏற்றார்.

*p* எங்களை நேசித்தே,
எங்களுக்காய் மாண்டார்;
*mf* ஆ, சர்வபாவப் பலியே,
எங்கள் சகாயர் நீர்

எத்துன்ப நாளுமே,
மா நியாயத்தீர்ப்பிலும்,
உம் புண்ணியம் தூய மீட்பரோ,
எங்கள் அடைக்கலம்.

இன்னும் உம் கிரியையை
எங்களில் செய்திடும்;
நீர் அன்பாய் ஈந்த கிருபைக்கே
எம் அன்பு ஈடாகும். ஆமென்.

---

**18** **(123)**

1

மூச்சொடுங்கும் நேரம் முடிந்தது என்றீரே ஏசுநாதா
மூவரும் செய்த ஆலோசனை முடிந்ததோ ,,

2

ஆவியால் பேசின தீர்க்கரின் வார்த்தைகள் ,,
மேவிச் சிலுவையைத் தாவி முடிந்ததோ ,,

3

முந்தின ஏற்பாடு முன் னடையாளங்கள் ,,
முற்றும் மறைந்து முழுதும் முடிந்ததோ ,,

4

தேவாசனம் விட்டுப் பூதலமே வந்த ,,
தேவ சித்த நோக்கம் யாவும் முடிந்ததோ ,,

5

மாண்டு மனிதரை மீட்டுக் கொண்டதினுல் ,,
மானிட ரட்சிப்பு முற்று முடிந்ததோ ,,

6

மீட்பின் சிருபையில் பாக்கியில்லாமலே ,;
மீட்கப் பட்டோர்களின் லக்கம் முடிந்ததோ ,,

7

எம் துன்பம் துக்கம் எல்லா முடிந்து போச்சே ,,
ஏழை இதற்கு நாமென்ன பதில் செய்வோம் ,,

8

இன்னமு மும்முட ஆவியின் வேலையை ,,
எம்மில் முடித்து ஈடேறவே செய்திடும் ,,

---

**19** **11. 10. 11. 10.** **(79)**

பிதாவே உம்முடைய கைகளில் என்னுடைய ஆவியை ஒப்புவிக்கிறேன்.

*p* இப்போது, நேச நாதா, தலை சாய்த்து
தெளிந்த அறிவோடு ஆவியை
ஒப்புவித்தீர் பிதாவின் கரமீது;
*pp* பொங்கு நெஞ்சம் மூச்சற்றொடுங்கிற்றே,

*p* சாமட்டுஞ் சாந்தமாய் என் துக்கப்பாரம்
நீர் தாங்கி, மனதார மரித்தீர்;
*mf* உம் சாவில் பெலன் உற்றே, ஆவியையும்
*p* அமைதலாய்த் தந்தைக் கொப்பு வித்தீர்.

*p* நல்மீட்பரே, சாவிருள் என்னைச் சூழ்ந்து
மரண அவஸ்தை உண்டாகையில்,
தொய்யும் ஆவியில் சமாதானம் ஈந்து,
ஒளி உண்டாக்கும் அச்ச ராவினில்.

*p* நான் மாளும்போதும் சிலுவையைக் காட்டும்;
*p* என் தலையை உம் மார்பில் அணைத்தே,

என் கடைமூச்சை அன்பாய் ஏற்றுக்கொள்ளும்;
அப்பால் உம் நித்திய ஓய்வு என்னதே.

ஆமென்.

---

## 20

(126)

பல்லவி.

பார் பார் பார் தேவஜீவன் போகுதுபார்.

சரணங்கள்.

1 கண்விழி வீழ்ந்திடக் கைகள் தளர்ந்திட
கால்களும் சோர்ந்து விழ
விண்ணொழி மங்கியே ஆவி பிரிந்து—திரு
மேனி குளிர்ந்திடவே— பார்

2 கல்வாரி வெற்பிலே காரிருட்டிலே
காணுதே செவ்வானம்
நல்மாரி பெய்யுது செவ்வாரி வீசுது
நாடு செழித்திடவோ?— பார்

3 பஞ்ச காயங்களில் செஞ்சுனை பாயுது
பாவி நெஞ்சைக் கழுவ
சஞ்சீவி பஞ்சப் பிரளயம் சாடுது
தற்பரன் பக்கத்திலே— பார்

4 பாவநாசத்திலே புண்ணிய கன்மலை
பார் முனி ஓங்கிய கோல்
கோப தாபத்திலே வீசின வீச்சிலே
குமிழி விட் டோடுதுபார்— பார்

5 ஐந்து மண்டபத் தாறு பெதஸ்தா
அங்கதோ கல்வாரியில்
ஐந்துமடையும் உடைந்து மிகவாய்
அருள் சாடுது பாரேன்— பார்

6 வல்லதேவன் கையில், வாயைத்திறந்து
வலுத்த சத்தமிட்டு
பொல்லார்க்காய்த் தன் ஆவி தன்னை ஒப்புவித்து
பொற்பரன் கண் மூடுறார்— பார்

---

# சிலுவைச் சரிதை.

## 21 கேள்வி (340)

*p* தம் ரத்தத்தில் தோய்ந்த
அங்கி போர்த்து,
மாதர் பின் புலம்ப
நடந்து,

*p* பாரமாங் குருசால்
சோர்வுறவே,
துணையாள் நிற்கின்றான்
பாதையே.

கூடியே செல்கின்றார்
அப்பாதையே;
பின்னே தாங்குகின்றான்
சிமோனே.

குருசைச் சுமந்தெங்கே
செல்லுகின்றார்?
முன் தாங்கிச் சுமக்கும்
அவர் யார்?

## II. மறுமொழி.

அவர்பின் செல்லுங்கள்
கல்வாரிக்கே,
அவர் மா தேவனின்
மைந்தனே.

*p* அவரின் நேசரே,
நின்று, சற்றே
திவ்விய முகம் உற்று
பாருமே.

*p* சிலுவைச் சரிதை
கற்றுக்கொள்வீர்;

போன்மை அதனால்
அறிவீர்.

*p* பாதையில் செல்வோரே
முன் ஏகிடும்
ரூபத்தில் காணீரோ
சௌந்தரியம்?

## III சிலுவைச் சரிதை.

*p* குருசில் அறையுண்ட
மனிதனாய்
உம்மை நோக்குகின்றேன்-
எனக்காய்.

*p* கூர் முள் உம் கிரீடமாம்,
குருசாசனம்;
சிந்தினீர் எனக்காய்
உம் ரத்தம்.

*p* உம் தலை சாயவோ
திண்டு இல்லை;
கட்டையாஞ் சிலுவை
உம் மெத்தை.

*p* ஆணி கை கால், ஈட்டி
பக்கம் பாய்ந்தும்,
ஒத்தாசைக்கங்கில்லை
எவரும்.

பட்டப்பகல் இதோ
ராவாயிற்றே;
தூரத்தில் நிற்கின்றார்
உற்றாரே.

*p* ஆ பெரும் ஓலமே!
தோய் சோரியில்
உம் சிரஞ் சாய்க்கிறீர்
மார்பினில்.

*p* சாருங் கள்ளன் உம்மை
நிந்திக்கவும்,
*pp* சகிக்கின்றீரோ நீர்
என்றாலும்?

*p* தூரத்தில் தனியாய்
உம் சொந்தத்தார்
மௌனமாய் அழுது
நிற்கின்றார்.

'இயேசு நசரேத்தான்
யூதர் ராஜா'
என்னும் விலாசம் உம்
பட்டமா?

*p* பாவி என் பொருட்டு
மாளவும் நீர்
*pp* என்னில் எந்நன்மையை
காண்கின்றீர்?

IV சிலுவையின் அழைப்பு.

(*To be sung by the Priest*)

நோவில் பெற்றேன், சேயே,
அன்பில் காத்தேன்;
நீ விண்ணில் சேரவே
நான் வந்தேன்.

தூரமாய் அலையும்
உன்னைக் கண்டேன்;
*f* என்னண்டை கிட்டிவா,
அணைப்பேன்.

*p* என் ரத்தஞ் சிந்தினேன்
உன் பொருட்டாய்
*mf* உன்னைக் கொள்ள வந்தேன்
சொந்தமாய்.

*p* எனக்காய் அழாதே,
அன்பின் சேயே;
*mf* போராடு மோட்சத்தில்
சேரவே.

V. இயேசுவை நாம் வேண்டல்.

*f* நான் துன்ப இருளில்
விண் ஜோதியே,
சாமட்டும் உம் பின்னே
செல்வேனே;

*p* எப்பாரமாயினும்
உம் சிலுவை,
*mf* நீர் தாங்கின் சுமப்பேன்
உம்மோடே.

நீர் என்னைச் சொந்தமாய்
கொண்டால், வேறே
யார் உம்மிலும் நேசர்
ஆவாரே?

இம்மையில் உம்மண்டை
நான் தங்கியே,
*f* மறுமையில் வாழ
செய்யுமே.

ஆமென்.

---

**22** மனஸ்தாப லித்தானியா (338)
7777

*Priest* தந்தை, சுதன், ஆவியே
தேவனுந் திரியேகரே,
வானசேனமீதுற்றே,
எங்களுக்கு இரங்கும்.

*Chotr* *p* எங்களை நீர் மீட்கவும்,
ராஜாசனம் விட்டிங்கும்

வந்தீர் ஏழையாகவும்;
கேளும், தூய இயேசுவே.

Congregation பாவிகள் விருந்தரே,
பாதத்தழும் மேரிக்கே
நேச வார்த்தை சொன்னீரே;
*p* கேளும், தூய இயேசுவே.

Trebles *p* சீமோன் மறுதலித்தும்,
அவன் கண்ணீர் சிந்தவும்
கண்டித்தீர் நீர் நோக்கியும்;
Full harmony கேளும், தூய இயேசுவே

Congregation வாதைச் சிலுவை நின்றே
'இன்று பரதீஸிலே
சேர்வாய்' என்றுரைத்தீரே;
*p* கேளும், தூய இயேசுவே.

*Men in unison*
*p* நீசர் நிந்தை சகித்தீர்;
பாவிக்காய் நொறுங்குண்டீர்;
பாவமின்றித் தீர்ப்புற்றீர்;
Full harmony கேளும், தூய இயேசுவே.

*pp* ஆண்டீர் சிலுவையினால்;
மீட்டீர் சுத்த ரத்தத்தால்;
மாண்டீர் கொடுஞ் சாவினால்;
*p* கேளும், தூய இயேசுவே.

Congregation தப்பிப்போனோர் மேய்ப்பரே,
நோவில் ஆற்றல் செய்வோரே,
ஆழ்ந்து போனோர் ஒலமே
*p* கேளும், தூய இயேசுவே.

Trebles மாசில்லா உம் தூய்மையும்,
எங்கள் பாவம் நீக்கவும்,
மனஸ்தாபம் ஈயவும்
Full harmony *p* கெஞ்சுகின்றோம், இயேசுவே.

*Congregation* பாவத்தை அகற்றியே,
திவ்விய அருள் பேணியே,
உம் சமுகம் நாடவே
*p* கெஞ்சுகின்றோம், இயேசுவே.

*Men in unison*
நாங்கள் உம்மை நம்பவும்,
ஆசாபாசம் நீக்கவும்,
பக்தர், சாந்தர் ஆகவும்
*Full harmony p* கெஞ்சுகின்றோம், இயேசுவே.

*Choir* பாவத்துக்குச் சாகவும்,
நீதிக்குப் பிழைக்கவும்,
ஜீவபாதை செல்லவும்
*p* கெஞ்சுகின்றோம், இயேசுவே.

*Full* *f* எங்கள் போர் முடியவும்,
நீள் பிரயாணம் ஓயவும்,
*p* நாங்கள் இளைப்பாறவும்
கெஞ்சுகின்றோம், இயேசுவே.
ஆமென்.

---

**23** பாடுகளின்பேரில் லித்தானியா (339)

7777

*Priest* தந்தை, சுதன், ஆவியே
தேவனாந் திரியேகரே,
வானசனமீதுற்றே,
*p* எங்களுக்கு இரங்கும்.

*Choir p* நிந்தை, கஸ்தி, தேவரீர்
எங்கள் பொருட்டடைந்தீர்;
தாசர் வேண்டுதலை நீர்
கேளும், தூய இயேசுவே.

*Trebles pp* சீஷர் மூவர் தூங்கவே,
கெத்செமேனாங் காவிலே

உற்ற வேதனையாலே
*Full harmony* கேளும், தூய இயேசுவே.

*Congregation* தந்தை சித்தம் ஆகவும்,
வந்த பாத்திரம் நீங்கவும்,
ஜெபித்த நிமித்தமும்
*p* கேளும், தூய இயேசுவே.

*Men in unison*
*p* யூதாஸ் முத்தஞ் செய்யவே,
யூதர் உம்மைக் கட்டவே,
சிறைப்பட்டதாலுமே
*Full harmony* கேளும், தூய இயேசுவே.

*Choir* *p* வாரால் பட்ட காயமும்,
போர்த்த சிவப்பங்கியும்,
முட்கிரீடம் நிமித்தமும்
கேளும், தூய இயேசுவே.

*Congregation*
*p* ராஜன் உம்மைத் தள்ளியே,
கள்ளன் பரபாசையே
கேட்டுக்கொண்டதாலுமே
கேளும், தூய இயேசுவே.

*Men in unison* 'சிலுவையில் அறையும்'
என்று யூதர் கூவவும்,
சாகச் சென்ற நிமித்தம்
*Full harmony p* கேளும், தூய இயேசுவே.

*Choir* *p* நீர் சுமந்த குருசாலே,
நீர் குடிக்கும்படிக்கே
தந்த காடியாலுமே
கேளும், தூய இயேசுவே.

*Congregation*

*p* கால் கரத்தில் ஆணியும்,
காட்டும் மேல்விலாசமும்,
காரிருள் நிமித்தமும்
கேளும், தூய இயேசுவே,

Choir *p* ஆடை சீட்டுப் போட்டதால்,
சாவில் வாதை பார்க்குங்கால்
யூதர் செய்த நிந்தையால்
கேளும், தூய இயேசுவே.

*Trebles and Altos*

*p* சொன்ன ஏழு வார்த்தையால்,
*pp* சோர்ந்து தலை சாய்ந்ததால்,
உந்தம் பிரேதச் சேமத்தால்
*Full harmony* கேளும், தூய இயேசுவே.

Congregation சோதனை நெருக்கையில்,
நாங்கள் தொய்ந்து போகையில்,
உந்தஞ் சாவின் வன்மையில்
*p* காரும்; தூய இயேசுவே.

*Men in unison*

உம் சிலுவைப் பொருட்டே,
யாவும் நஷ்டம் எனவே
நாங்கள் எண்ணும் படிக்கே
*Full harmony p* காரும், தூய இயேசுவே.

*Full* நாங்கள் உம்மைப் பற்றியே,
*p* சாவின் நோவைக் கடந்தே,
*mf* உம் சமுகஞ் சேரவே
காரும், தூய இயேசுவே. ஆமென்.

---

# பாவ அறிக்கை.

**24**

1 தேவ தேவா ஜீவா காவா ஆவியில் நொந்தேனே பாவா
பாவி என்னை இப்போ காவா பரமென்று வந்தேனே தேவா.

2 அகிலமனுக்குலத்தார் அந்தரங்க உள்ளங்களின்
சகல ரகசியமும் குருசுவாமி நீயறிவாயன்றோ.

3 தூசி, மண், கிருமியான தோஷி நான் என்பாவங்களை
ஈசனுன்முன் மறைக்காமல் இப்போச் சொல்ல வந்தேனையா.

4 பயந்து நடுநடுங்கி நெஞ்சம் பதைபதைத்து வெட்கத்தோடு
பரிதாப துக்கத்தோடு பாவி நான் புலம்புறேனே.

5 அப்பன் நானென் தாயாரிடம் துர்க்குணத்தில் உருவானேன்.
அவதரித்த நாள்முதலாய் அடிமை இன்னும் பாவி தானே.

6 சிறுவயதில் முந்தி என்னில் தென்பட்டது பொய் பொறுமை,
மறுவயதாம் வாலிபத்தில் அறுவகை பாவத்துள் ஆனேன்.

7 காமக் குரோத லோப மோகமா மதமாச்சர்யம்
பஞ்ச கர்மப் பாதகங்களாலே கறையாக்கி சொண்டேனையா.

8 யோக்கியன்போல் வேஷம்போட்டேன் சாக்கடைபோலா
[கிப்போனேன்
தாய்க்கொளித்ததேனுமுண்டோ சண்டாளன் நானேயப்பா.

9 கனப்பெருமை பணப்பெருமை கல்வி, பக்தி வாய்ப்பெருமை
கண்டாலோர் ஜாதிப்பெருமைக் கட்டுகளுக் குட்பட்டேனே.

10 உட்பட்டேன் உலகமெச்ச உன்னை உன்னிப் பார்த்துமென்ன
மட்டில்லா திகழ்ந்தே பேசும் வம்புலகிதென்றுங்கண்டேண்.

11 கண்டுமனம் மாறினேனா கனவிலுன்னை நினைந்தேனா
தொண்டடிமை புகுந்தேனா சுவாமி ஒன்றும் செய்தேனில்லை.

12 என்னைத்தானறிந்தேனா ஏங்கி நெஞ்சம் உடைந்தேனா
உன்னைத்தான் தேடினேனா உன் பக்தரை கூடினேனா?

13 பக்திமலர் சூடினேனா பரனுன்முன் கூத்தாடினேனா;
தத்தம் செய்து வாடினேனா சுவாமி ஏதும் செய்தேனில்லை.

14 நன்மைஏதும் செய்தறியேன் லஞ்சம்வாங்கி கொள்ளையிட்டேன்
உண்மைவிட்டுப் பொய்ச்சமர்த்தால் ஊரில்பல பேரடைந்தேன்

15 ஏழைகளை இம்சை செய்தேன் இரக்கமின்றிக் கொடுமை செய்தேன்
காளை போலே காலம் தள்ளிக் காய்ந்தேனிப்போத் தொய்ந் தேனப்பா

16 பிறரை அவதூறுபண்ணிப் பெருமைக்கென்றே தருமஞ்செய்து
வருமமே சாதித்து வந்த மாபாவி நானேயப்பா.

17 வேதம் படித்தேன் போதித்தேன் மெய்யன் புணர்வோ இல்லை
பாதகன் என் கள்ளநெஞ்சைப் பரிசுத்த நெஞ்சாகச்செய்யேன்.

18 எனைப்பிடித்த பேய்களெல்லாம் கணப்பொழுதில் ஓடிவிட
மனக்கவலை நீங்க ஞான வாஞ்சைகொள்ளச்செய்தருளேன்.

19 புண்ணியனே என்னரசே பூதல ரக்ஷகன் நீயே
எண்ணரியாப் பாவம்செய்தேன் உன்முன்வந்து நொந்தழுதேன்

20 வன்குருசிலேயெனக்காய் மாபலியாகின தியாகி
உன் சரணடைய வந்தேன் தஞ்சமென்றெனைச் சேரப்பா.

21 தஞ்சமென்று வந்தவனைத் தள்ளிவிடேன் என்ற வாக்கை
பஞ்சை எனை நம்பவைத்துன் பாதமடையச் செய்ததே.

22 பெற்றவன் நீ, கொற்றவன் நீ, உற்றமும் நீ, சுற்றமும் நீ,
பிராணநாயகனும் நீயே, பேதையை நீ ஆட்கொள்வாயே.

23 ஆண்டவனும் நீயே சுவாமி ஆள்பவனும் நீயே நாதா
அம்பலத்துள் நித்ய ஜீவன் அடையக் கிருபை செய்வாயப்பா.

24 இம்மட்டுள்ள என் பாவங்கள் எல்லாம் நீ தான் பொறுத்தாய்
இதுமுதல் எனக்குள் தங்கியிருக்கவும் எனைச் சேரப்பா.

25 என்மூச் சொடுங்கும்வேளை உன்பேச்சும் உன் பணியும்
உன் பாட்டுமாயிருந்து உயர்த்தி உன்னைப் போற்றுவேனே.

26 தந்தைதாய் சகோதரரும் பந்துரவும் நேசருமிங்
கெந்தமட்டும் சார்ந்தனையே எந்த நாளும் சொந்தம் நீயே.

27 சொந்தம் நீ எனக்கிருக்க இந்த உலகிலேன் பயம்
சிந்தை மகிழ்ந்துன்னைப்பாடி தேசம் எங்கும் புகழ்வேனே.

28 தனியே சிந்தனை செய்வேன் ஜாலம் பேய் உலகம் மாயம்
கனிய நெஞ்சுருகி உன்னைக் கண்டு நம்பிவந்தேன் ராஜா.

29 அப்பனே நீர் செய்த நன்றி அனந்தனந்தங்கோடியன்றோ
எப்படியதை மறப்பேன் தப்பும்வழி சொல்லேன் அப்பா.

30 அடியேனையுன் சமுகத்தில் ஒப்படைத்துவிட்டேன் சுவாமி
முடிசூட்டும் கருணைநாதா முற்றும் என்னை ரட்சிப்பாயே.

---

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

**25** (137)

1 இன்று அதிகாலை யேசு உயிர்த்தார்
நாமெல்லாரும் கூடி மகிழ் கொண்டாடுவோம்
அவரை நாம் ஒன்று போல் தரிசிக்க
அதிகாலையில் எழும்புவோம்.

பல்லவி

தேவனுடைய குமாரன் உயிர்த்தார்
ஜெயகீதம் பாடிப் பாடிப்போற்றுவோம்
அருமையின் நாதர் வெற்றி சிறந்தார்
ஆனந்தங் கொண்டாடுவோம்.

2 வாரத்தின் முதல் நாள் அதிகாலமே
வந்து யேசு ரட்சகரைக் காணவே
கையிலே சுகந்தத் தைலத்தோடுமே
கல்லறைக்குள் ஓடிப்போனாரே.

3 ஸ்திரிகள் தாம் அங்கே போய் நிற்கையில்
இரண்டு தூதர் அங்கே நிற்கப் பார்க்கையில்
தேவதூதர்கள் அவர்களிடத்தில்
இயேசு இங்கே இல்லை என்றாரே.

4 கல்லறைக்குள்ளே அவர்கள் பார்த்ததும்
கர்த்தர் அங்கேயில்லை என்றறிந்ததும்
அதிக மனத்துக்க மடைந்ததும்
அவ்விடத்தை விட்டுப் போனாரே.

5 மற்றவர்கள் தானும் விட்டுப் போய்விட்டார்
மகதலேனா மரியாளோ நின்றாள்
கண்ணீரோடுமே தேடியவள் சென்றாள்
கர்த்தரைக் கண்டு தரிசித்தாள்.

6 நம்முடைய பாவங்களுக்காகவே
தம்முடைய ரத்தம் சிந்தி மீட்டாரே
நமக்கு நல் நம்பிக்கை யுண்டாக்கவே
நல்ல மீட்பர் வெற்றி சிறந்தார்.

7 அல்லேலூயா பாடி மகிழ் கொண்டாடுவோம்
ஆனந்தமாய் என்றும் மகிழ் கொண்டாடுவோம்
வல்லமையாய் ஏசுநாதர் உயிர்த்தார்
வாழ்த்திப் போற்றிப் பாடக்கடவோம்.

---

**26** (140)

1 யூதர் ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த் தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்.

2 வேதாளக் கணங்கள் ஓடிடவே
ஓடிடவே யுருகி வாடிடவே.

3 வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே திறனை மதித்திடவே.

4 மரணச் சங்கிலிகள் தெறிப்பட்டன.
தெறிபட்டன நொடியில் முறிபட்டன.

5 எழுந்தாரென்றதொனி எங்குங் கேட்குதே
எங்குங்கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே.

6 மாதர் தூதரைக் கண்டக மகிழ்ந்தார்
அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார்.

7 மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை என்றும் மரிப்பதில்லை.

---

## 27

(143)

1 கொல்கதா மலையில் கொலையாட்கள் மத்தியில்
தோய்ந்துயிர் நீத்து ஓய்ந்தெழுந்தனர், ஏசுநாயகர்

பல்லவி

ஆமென் ஆமென் ஆமென் அல்லேலூயா பாடுவோம்
ஆம் யேசு சாவின் கூர் ஒடித்து உயிர்த்தெழுந்தனர்

2 கொலைஞர் யூதரும் பகைஞர் ரோமரும்
பதித்த முத்திரை சிதைத்தெழுந்தனர், ஏசுநாயகர்.

3 வேதாள சேனைகள் பாதளத்தில் நடுங்க
ஏதேன் வாக்கு ஸ்திரீயின் வித்தே செழுந்தனர்.

4 விண்ணே நீ பாடிடு மண்ணே நீ செவிகொடு
நித்ய மாணம் சத்யன் ஜெயித்து உயிர்த்தெழுந்
தனர்.

---

பரிசுத்த நற்கருணை.

## 28

*Benedictus*

I கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்
உன்னதத்திலே ஓசன்னா. [பட்டவர்

II ஸ்தோத்திரம், கர்த்தர் நாமத்தில் வருகிறவர்
கர்த்தர் நாமத்தில் வருகிறவர், ஸ்தோத்திரம்.
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.
கர்த்தர் நாமத்தில் வருகிறவர், ஸ்தோத்திரிக்கப்
உன்னதத்திலே ஓசன்னா! [பட்டவர்.

---

*Agnus Dei.*

I லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ
ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்
லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ
ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.
லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ
ஆட்டுக்குட்டியே, சமாதானம் தாரும்.

II லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே,
எங்களுக்கு இரங்கும், எங்களுக்கு இரங்கும்.

III உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, அடியார் மேல் இரங்கும்.
உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, அடியார் மேல் இரங்கும்.
உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, நீர் சமாதானம் தாரும்.

IV லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.
லோகத்தின் பாவங்களைச சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.
லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, உமது சமாதானத்தை
எங்களுக்கு அருளிச்செய்யும்

---

## 29 10. 10. (223)

*நீங்கள் வந்து என் அப்பத்தைப் புசித்து
நான் வார்த்த திராட்சரசத்தைப் பானம் பண்ணுங்கள்:*

*p* கர்த்தரின் மாம்சம் வந்துட்கொள்ளுங்கள்;
சிந்துண்ட ரத்தம் பானம்பண்ணுங்கள்.

*p* தூய ரத்தத்தால் ரட்சிப்படைந்தோம்;
*mf* நற்பெலன் பெற்று, துதி ஏற்றுவோம்.

தேவகுமாரன், மீட்பின் காரணர்,
தம் சிலுவையால் வெற்றி பெற்றவர்.

*p* தாமே ஆசாரி, தாமே பலியாய்,
தம்மைச் செலுத்தினார் எல்லார்க்குமாய்.

பண்டை ஏற்பாட்டின் பலிகள் எல்லாம்
இந்த ரகஸ்யத்தின் முன்குறிப்பாம்.

சாவின் கடூர வன்மை மேற்கொண்டார்;
தம் பக்தருக்கருள் கடாட்சிப்பார்.

உண்மை நெஞ்சோடு சேர்ந்து வாருங்கள்,
ரட்சிப்பின் பாதுகாப்பை வாங்குங்கள்.

தம் பக்தரை இங்காண்டு காக்கிறார்;
அன்பர்க்கு நித்திய ஜீவன் ஈகிறார்.

விண் அப்பத்தாலே திருப்தி செய்கிறார்,
ஜீவ தண்ணீரால் தாகந்தீர்க்கிறார்.

*pp* எல்லாருந் தீர்ப்புநாளில் வணங்கும்
அல்பா, ஓமெகா நம்மோடிணங்கும்.
ஆமென்.

---

**30** 10.10.10.10.10.10. (227)

எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும்
சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்.

*p* பிதாவே, எங்களைக் கல்வாரியில்
நீர் மீட்ட அன்பை நாங்கள் உணர்ந்தே
நார்க்காய் விண்ணில் உம் சமுகத்தில்
பரிந்து பேசுங் கிறிஸ்துவுடனே,
*mf* ஒரே மெய்யான பலி படைப்போம்;
இங்கே அதை உம்முன் பாராட்டுவோம்.

*p* ஆ, எங்கள் குற்றங் குறை யாவையும்
பாராமல் கிறிஸ்து முகம் நோக்குமே,
விஸ்வாசம் மங்கி, ஜெபம் குன்றியும்
உம் பேருளைப் போக்கடித்தோமே;
*mf* என்றாலும், எங்கள் பாவம் ஆக்கினை
இடையில் வைத்தோம் மீட்பர் புண்ணியத்தை.

*p* இவ்வேளை எங்கள் நண்பர்க்காகவும்
உம் சன்னிதானம் வேண்டல் செய்வோமே;
சிறந்த நன்மை யாவும் அளியும்;
உம் மார்பினில் அணைத்துக் காருமே;

எத்தீங்கும் அணுகாமல் விலக்கும்;
உம்மில் நிலைக்கப் பெலன் அருளும்.

*p* இவ்வாறு அண்டினேம் உம் சரணம்,
மா சாந்தமுள்ள மீட்பரான நீர்
*mf* பேரின்பந் தருந் திவ்விய போஜனம்
கொடுப்பதாலும் தீமை நீக்குவீர்:
*f* உற்சாகத்தோடு உம்மை என்றைக்கும்
சேவித்துப் பற்றத் துணை புரியும். ஆமென்.

---

**31** C. M. (228)

நமக்கு ஒரு பலிபீடமுண்டு.

ஒரே ஓர் முறை ரட்சகர்
தம் ஜீவனை விட்டார்;
ரட்சிப்பின் குருசுமுன் பக்தர்
சாஷ்டாங்கம் பண்ணுவார்.

குறைவில்லாப் பலி ஒன்றே;
திரும்பச் செலுத்தார்;
ஆனால், அதைப் பிதா முன்னே
தினம் பாராட்டுவார்.

மா பரிசுத்த ஸ்தலத்தில்
ஆரோனின் வம்சத்தார்
சென்றே, கிருபாசனத்தில்
இரத்தத்தைத் தெளித்தார்.

அவ்வாறு சர்வ வல்லோராம்
மகா ஆசாரியார்
*p* தம்மால் மீட்புற்றோர்க்காகத் தாம்
விண்ணுள் பிரவேசித்தார்,

மாண்பான தம் சரீரத்தில்
மன்றாடி நிற்கிறார்;
பக்தர்க்கதை இப்பந்தியில்
பிரசன்ன மாக்கிறார்.

நாதா, நீர், வரும் அளவும்
உம் சாவைக் கூறுவோம்;
எங்கட்போர் பலிபீடமும்
உண்டென்று அறிவோம். ஆமென்

———

**32** 7676 D. (229)

என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்.

பிதாவே, நாங்கள் அன்பில்
நிலைத்து, சுத்தராய்.
உமக்கு ஸ்தோத்திரப் பலி
செலுத்தும்படியாய்,
*p* உருக்க அன்பால் எங்கள்
மன்றாட்டைக் கேளுமே;
உம் பிள்ளைகளின் பேரில்
கடாக்ஷம் வையுமே.

இயேசுவே, உம்மைப் போற்ற
எங்கள் சகாயர் நீர்,
நேராக நாங்கள் செல்ல
வழியும் தேவரீர்;
நீர் போரில் காப்பேனென
மொழிந்த சத்தியரே;
*p* நீர் நித்திய ஜீவ ஊற்று
களைத்தோர் அன்னமே.

மெய் ஜீவன் ஈயும் ஆவீ,
கண்ணுக்குத் தாசனா
உம் வரம் நவமாக்கி,
நீக்கும் எம் இருளை;
உம் ஆசிர்வாத மாரி
ஆன்மாவில் பொழிந்தே,
நாங்கள் கர்த்தாவின் மாம்சம்
உட்கொள்ளச் செய்யுமே.

ஆ மூவானபோம்
மேலான ஏகரே,
உம்மண்டை கிட்டிச்சேர
சார்ந்தோம் உம்பேரிலே;
*p* அபாத்திரர், பெலவீனர்
*mf* உம்மையே நம்பினோம்;
மன்னிப்பாம் ஆசீர்வாதம்
ஈந்தால் பயப்படோம். ஆமென்

---

**33** 6565. (235)

இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்

*p* சாந்த இயேசு சுவாமீ,
வந்திந்நேரமும்,
*mf* எங்கள் நெஞ்சை உந்தம்
ஈவால் நிரப்பும்.

வானம், பூமி, ஆழி
உந்தம் மாட்சிமை
ராஜரீகத்தையும்
கொள்ள ஏலாதே.

*p* ஆனால், பாலர் போன்ற
ஏழை நெஞ்சத்தார்
*mf* மாட்சி பெற்ற உமமை
ஏற்கப் பெறுவார்,

விண்ணின் ஆசீர்வாதம்
மண்ணில் தாசர்க்கே
*mf* ஈயும் உம்மை நாங்கள்
போற்றல் எவ்வாறே?

*p* அன்பு, பயம், வேறு
நல் வரங்களும்,
*mf* சாமட்டும் நிலைக்க
ஈயும் அருளும். ஆமென்

## 34 C.M. (236)

வனாந்தரமான ஓரிடத்தில் தனித்து
சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள்.

*p* இளைத்து நொந்த நெஞ்சுடன்
தொல்லைகளை விட்டே,
சற்றே, கர்த்தாவே, உம்முடன்
தங்கிட வந்தோமே.

*p* லௌகீக கவ்வை மிஞ்சலால்
விண் வீட்டை மறந்தோம்;
*mf* இங்கே திரை கிழிவதால்
காணாததைக் காண்போம்.

*p* உம் தூய்மை எங்கள் பாவத்தை
நன்றாய் விளக்குமே;
உம் அன்பின் தீர்த்தந் தோஷத்தை
நிவர்த்தி செய்யுமே.

*p* பொல்லாரின் வாக்குவாதத்தால்
கலங்கிப்போய் வந்தோம்.
தேவா, உம் சமாதானத்தால்
இங்காறித் தேறுவோம்.

உம்மைப் பணிந்திக் காலையில்
ஆனந்தம் அடைவோம்;
நீர் எம்மில், நாங்கள் உம்மில்
உண்டென்று அறிவோம். ஆமென்

---

## 35 பரிசுத்த ஆவியின் வரத்துக்காக

*Veni Creator Spiritus.*

1 மா தூய ஆவி இறங்கும்,
விண் தீபம் நெஞ்சில் ஏற்றிடும்.
ஞானாபிஷேக தைலம் நீர்!
நல் வரம் ஏழும் ஈகிறீர்.

2 மெய் ஜீவன், ஆறுதல் அன்பும்
உம் அபிஷேகம் ஈந்திடும்;
ஓயாத ஒளி வீசியே
உள்ளத்தின் மருள் நீக்குமே;

3 துக்கிக்கும் நெஞ்சைத் தேற்றவே,
ஏராள அருள் பெய்யுமே;
மாற்றார் வாராமல் காத்திடும்.
சீர்வாழ்வு சுகம் தந்திடும்.

4 பிதா, குமாரன், ஆவியும்
திரியேகரென்று போதியும்!
யுகா யுகங்களாகவே
உம் தாசர் பாடும் பாட்டிதே:—
'பிதா, சுதன், சுத்தாவி! உமக்கே
சதா நித்தியமும் ஸ்துத்தியமே!'
ஆமென்.

பரிசுத்த அந்திரேயாவின் திருநாள்.

---

**36** 8787 (299)

அவருக்குப்பின் சென்ற இரண்டு பேரில் ஒருவன்
அந்திரேயா என்பவன்.

ஆயுள் புசல் கோஷ்டத்திலும்
இயேசு தாம் அழைக்கிறார்:—
'என்பின் செல்வாய்' என்று அவர்
இன்பமாய் உரைக்கிறார்.

அவ்வழைப்பைக் கடலோரம்
பக்தன் அந்திரேயா கேட்டான்;
அவர்க்காக வீடு, இனம்
யாவும் விட்டுப் பின்சென்றான்.

*p* பொருளாசை நீக்க இயேசு
நம்மையும் அழைக்கிறார்;

'சிஷனே, மென்மேலும் என்னை
நேசிப்பாயா?' என்கிறார்.

*p* இன்பந்துன்பம், சுகம் நோவில்,
இயேசு நம்மை அழைக்கிறார்;
யாவிலும் மேலாகத் தம்மில்
அன்புகூரக் கேட்கிறார்.

*p* உம் அழைப்பை நாங்கள் கேட்டு,
கீழ்ப்படிந்து நித்தமும்,
உம்மை நேசித்தே பின்பற்ற,
இயேசு ஸ்வாமீ, ஏவிடும். ஆமென்.

---

பரிசுத்த அப்போஸ்தலனாகிய தோமாவின் திருநாள்.

**37** C. M. (300)

காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

விண் போகும் பாதை தூரமாம்
என்றே நாம் எண்ணுவோம்;
பகைஞரின் கொடூரமாம்
வன்மையை உணர்வோம்;

*p* ஆனால் எப்பாடும் பாவமும்
இல்லாத அவ்விண்ணை
நாம் கண்டிலோம், நாம் காணவும்
இம்மையில் கூடாதே.

சிற்றின்பத்தை வெறுத்தலும்,
உள்ளத்தை முற்றும் நாம்
கர்த்தாவுக் கொப்புவித்தலும்
அரிதென்றெண்ணலாம்;

*p* ஆனாலோ, பாவம் நீங்கவும்
அகோர வேதனை
மீட்பர் அடைந்து மாண்டதும்
நாம் காணக் கூடாதே.

பக்தன் தோமாவே, நின்போலும்
கண்ணால் காணாமலே,
விஸ்வாசந் தக்கதாயினும்
சந்தேகங் கொள்வோமே;

*f* என்றாலுங் 'காணாதிருந்தும்
விஸ்வாசித்தோர் பாக்கியர்'
என்றே நீ பெற்ற வாக்கையும்
நாங்களுஞ் சார்ந்தவர். ஆமென்

---

பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.

38 7676 (301)

முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே தான் அழிக்கத்தேடின
விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான்.

மேய்ப்பரை வெட்ட, ஓநாய்
ஆட்டைப் பட்சிக்கவே,
சிதறடிக்கப்பட்ட
மந்தை மேல் பாய்ந்ததே.

சவுல் சீஷர்களைக் கட்ட,
மா மூர்க்கமாய்ச் சென்றான்;
விண்ஜோதி க்ஷணங் கண்டு
தரையில் விழுந்தான்.

'ஏன் என்னைத் துன்பம் செய்வாய்?'
என்றே காதுற்றதும்,
*p* கர்த்தாவே, யாது செய்வேன்?'
என்றான் நடுங்கியும்.

கிறிஸ்துவின் சத்துரு நல்ல
போர்ச் சேவகனானான்;
*p* கொல் ஓநாய் போன்றோன் ஆட்டு
குட்டிக்கொப்பாயினான்.

*p* நல் மேய்ப்பர் இயேசு ஸ்வாமீ,
மந்தையைக் காருமே,
அலையும் ஆட்டை உம்பால்
நீர் கொண்டு வாருமே. ஆமென்.

---

## 39 பரி. பவுலின் திருநாள். (263)

### பல்லவி.

நல்ல வாக்கியம்—நமக் குண்டும்
ரட்சகர் வாக்கியம்.

### அனுபல்லவி.

எல்லை யில்லாத் தயை யெங்கும் நிறைந்தது
வல்ல பவுல் திரு நாளுமே வந்தது— நல்ல

### சரணங்கள்.

1 பவுலென்னும் நாமம்—பழைய பேர்
சவுலென்னும் கேமம்,
சிலி சியா நாடதில் சிறந்த தோர் தருசுவில்
கலியுக யூதனும் கமாலியேல் சீடனும்— நல்ல

2 மார்க்க விரோதி—பரிசுத்த
வான்கள் குரோதி
ஆர்க்குமே அஞ்சாமல் ஆச்சாரியனிடம்
தீர்க்கமாய் நிருபங்கள் மூர்க்கமாய் வாங்கினன் —
நல்ல

3 ஆணென்றும் பாரான்—ஐயோ இது
பெண்ணென்றும் ஓரான்
நானென்ற ஆணவம் மிஞ்சித் தமஸ்குவும்
தோணவே வந்தவன் துள்ளி விழுந்திட்டான்—
நல்ல

4 யேசுவைக் கண்டான்—சுவாமியே நீர்
யாரென்று கேட்டான்
மாசுகள் நீங்கிட மாறிக் குணப்பட்டான்
மேசியா நாமத்தை மெச்சிப் பிரசங்கித்தான்....நல்ல

5 புற ஜாதியாரும்—வரத் தகாப்
புறக் கணிப் பாரும்
பரலோக வாழ்வதில் பங்கு பெருவாரென்ற
பரம ரகசியம் பவுலுக்கு வெளியாச்சு— நல்ல

6 அன்புள்ள வசனம்—அனைவரும்
அறிந்திடத் தவனம்
ஆசியா, ஐரோப்பா, அடுத்த பிரித் தானியா
அடங்கலும் சுவிசேஷம் அறிவித்துச் சிறைப்பட்
டான்—நல்ல

7 நியமங்கள் சுருதி—பல பல
நிருபங்கள் எழுதி
நிந்தை யுபத்திரவம் நெடுந்துன்பந் தான்பட்டு
நேரோ ராய னென்னும் நீசனால் மாண்டிட்டான்
—நல்ல

8 திருச் சபை யோரே—சுவிசேடம்
செப்பிடுவீரே
பரிசுத்த பவுலைப் போல் பலருமே குணப்பட்டு
தரிசித்து யேசுவின் சரணம் புகுந்திடும்—நல்ல

---

பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்.

**40** C. M. (302)

ஆண்டவர் தம்முடைய ஆலயத்திற்குத் தீவிரமாய் வருவார்.

உன் வாசல் திற, சீயோனே!
மெய்ப் பொருளானவர்
தாமே ஆசாரி பலியாய்
உன்னிடம் வந்தனர்.

கடாய்கள் ரத்தஞ் சிந்தல் என்?
பிதாவின் மைந்தனர்
*p* தம் பீடமீது பாவத்தின்
நிவாரணம் ஆனர்.

*b* தன் பாலன் தேவன் என்றோர்ந்தே,
தூய் கன்னி மரியாள்

ஓர் ஜோடு புருக்குஞ்சுகள்
காணிக்கையாய் வைத்தாள்.

தாம் எதிர் பார்த்த கர்த்தரை
அன்னாள் சிமியோனும்
கண்ணுற்றுச் சாட்சி கூறினார்
ஆனந்தமாகவும்.

*p* சௌபாக்கியவதி மாதாவோ
தன் நெஞ்சில் யாவையும்
வைத்தெண்ணியே வணங்கினாள்
மா மௌனமாகவும்.

*f* பிதா, குமாரன், ஆவிக்கும்
நீடூழிகாலமே
எல்லாக் கனம், மகிமையும்
மேன்மேலும் ஓங்குமே. ஆமென்

———

பரிசுத்த மத்தியாவின் திருநாள்.

41 777777 (303)

சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது.

*p* ஆத்துமாக்கள் மேய்ப்பரே,
மந்தையைப் பட்சிக்கவும்
சாத்தான் பாயும் ஓநாய்போல்
கிட்டிச்சேரும் நேரமும்,
நாசமோசம் இன்றியே
காரும், நல்ல மேய்ப்பரே.

*p* பணம் ஒன்றே ஆசிக்கும்
கூலியாளோ ஓடுவான்;
காவல் இன்றிக் கிடக்கும்
தொழுவத்தின் வாசல் தான்;
*f* வாசல், காவல் ஆன நீர்
மந்தைமுன் நின்றருள்வீர்

கெட்டுப்போன யூதாஸின்
ஸ்தானத்திற்குத் தேவரீர்
சீஷர் சீட்டுப்போடவே
மத்தியா நியமித்தீர்;
எங்கள் ஐயம் யாவிலும்,
கர்த்தரே, நடத்திடும்.

*f* புதுச் சீயோன் நகரில்
பக்தர் வரிசையிலே
நிற்கும் மத்தியாவோடும்
நாங்கள் சேரச்செய்யுமே,
கண் குளிர உம்மையும்
காணும் பாக்கியம் அருளும். ஆமென்.

---

## பாக்கியவதியாகிய கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.

---

**42** S.M. (304)

இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்.

*f* ஆசித்த பக்தர்க்கு
சந்தோஷமானதாம்
இந்நாளுக்காய்க் கர்த்தாவுக்கு
கனம், புகழ் எல்லாம்.

ஸ்திரியின் வித்தானவர்
ஓர் கன்னி கர்ப்பத்தில்
பிறப்பார் என்று உத்தமர்
கண்டார் முன் உரையில்

*p* விஸ்வாசப் பக்தியாய்
மா சாந்த மரியாள்
அருளின் வார்த்தை தாழ்மையாய்
பணிந்து நம்பினாள்.

*p* ‘தெய்வீக மாட்சிமை
உன்மேல் நிழலிடும்’
என்னும் வாக்கேற்ற அம்மாதை
போல் நாமும் பணிவோம்.

மெய் அவதாரமாம்
நம் மீட்பர் பிறப்பால்
தாயானாள் பாக்கியவதியாம்
காபிரியேல் வாக்கால்.

*f* சீர் கன்னி, மைந்தனே,
இயேசுவே தேவரீர்
பிதா, நல்லாவி யோடுமே
புகழ்ச்சி பெறுவீர். ஆமென்

---

## பரிசுத்த மாற்குவின் திருநாள்

---

**43** C. M. (350)

நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவன்.

கிறிஸ்துவின் சுவிசேஷகர்
நற்செய்தி கூறினார்;
யாவர்க்குந் திவ்விய ரகஸ்யம்
விளங்கக் காட்டினார்.

பூர்வீக ஞானியார் மங்கலாய்
அறிந்த வாக்கையே
கார் மேகம் இல்லாப் பகல்போல்
இவர்கள் கண்டாரே.

மெய்ம் மாந்தனான தேவனின்
மகா செய்கை எல்லாம்
உரைக்குந் திவ்விய வசனம்
சாகாமை உள்ளதாம்.

நால் சுவிசேஷகரையும்
ஓர் ஆவி ஏவினார்;

தம் வேதத்தாலே நம்மையும்
இப்போதழைக்கிறார்.

நீர் பரிசுத்த மாற்குவால்,
புகன்ற செய்திக்கே
அடியார் உம்மை இத்தினம்
துதிப்போம், கர்த்தரே. ஆமென்.

---

## பரிசுத்த பிலிப்பு. பரிசுத்த யாக்கோபு ஆகிய இருவரின் திருநாள்

---

### 44 L. M. (306)

பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்றான். தேவனுக்கு ஊழியக்காரனாகிய யாக்கோபு.

காரிருள் பாவம் இன்றியே,
பகலோனாகத் தேவன் தாம்
பிரகாசம் வீசும் நாட்டிற்கே
ஒன்றான வழி கிறிஸ்துதாம்.

ஒன்றான திவ்விய சத்தியத்தை
நம் மீட்பர் வந்து போதித்தார்;
பக்தர்க்கொன்றான ஜீவனை
தம் ரத்தத்தால் சம்பாதித்தார்.

முக்காலம் தூய்யோன் பிலிப்பு
காணாததை நாம் உணர்ந்தோம்;
கிறிஸ்துவில் தேவனைக் கண்டு,
மேலான ஞானம் அடைந்தோம்.

நற்செய்கையில் நிலைப்போர்க்கே
வாடாத கிரீடம் என்றுதான்
விஸ்வாசிகள் கைக்கொள்ளவே
யாக்கோபு பக்தன் கூறினான்.

*f* மெய்வழி, சத்தியம், ஜீவனும்
மாந்தர்க்காய் ஆன இயேசுவே.

பிதாவின் முகம் நாங்களும்
கண்டென்றும் வாழச்செய்யுமே. ஆமென்.

---

## அப்போஸ்தலனாகிய பரிசுத்த பர்னபாவின் திருநாள்.

---

**45** 7777 (307)

பர்னபா நல்லவனும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்.

'ஆறுதலின் மகனும்'
என்னும் நாமம் பெற்றோனும்
பக்தன் செய்கை வாக்கிலே
திவ்விய ஒளி வீசிற்றே.

தேவ அருள் பெற்றவன்
மா சந்தோஷங் கொண்டனன்;
வார்த்தை கேட்டநேகரும்
சேர்ந்தார் கர்த்தர் அண்டையும்.

*p* பவுலை, பர்னபாவையும்
ஊழியஞ் செய்ய அழைத்தும்
வல்ல ஞான வாத்தை
ஈந்தீர், தூய ஆவியே.

கிறிஸ்து வலப்பக்கமாய்
நாங்களும் மாசற்றோராய்,
நிற்க, எங்கள் நெஞ்சையும்
தேவரீரே, நிரப்பும். ஆமென்

---

## பரிசுத்த யோவான்ஸ்நானனின் திருநாள்.

---

**46** L. M. (308)

கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவன்.

*f* கர்த்தர் சமீபமாம் என்றே
யோர்தான் நதியின் அருகே,

முன்தூதன் யோவான் கூறிடும்
நற்செய்தி கேட்க விழியும்.

விருந்து போன்ற நாதனுர்
நம் நெஞ்சில் வந்து தங்குவார்;
அவர்க்கு வழி ஆகவும்
அகத்தைச் சுத்தம் பண்ணுவோம்.

*p* நாதா, நீர் எங்கள் தஞ்சமும்
ரட்சிப்பும், ஜீவ கிரீடமும்;
உம் அருள் அற்ற யாவரும்
உலர்வார் புஷ்பம் போலவும்.

நோய் கொண்டோர் சொஸ்தமாகவும்,
வீழ்ந்தோர் கால் ஊன்றி நிற்கவும்,
பூலோகஞ் சீர் அடையவும்
எழும்பி நீர் பிரகாசியும்.

உமக்குச் சாட்சி கூறியே,
உம் வழி ஆயத்தமாக்கவே,
யோவான் ஸ்நானன் போல் நாங்களும்
உம் அருள் பெறச் செய்திடும். ஆமென்

———

பரிசுத்த பேதுருவின் திருநாள்.

47 8886 (309)

நீ என்னை நேசிக்கிருயா?

*p* ஓர்முறை விட்டு, மும்முறை
சீமோன் மறுத்தும், ஆண்டவர்
'என்னை நேசிக்கிருயா?' என்றே
உயிர்த்தபின் கேட்டனர்.

விஸ்வாசமின்றிக் கர்த்தரை
பன்முறை நாமும் மறுத்தோம்;
பயத்தினுல் பலமுறை
நம் நேசரை விட்டோம்.

சீமோனே சேவல் கூவுங்கால்
மனங் கசந்து அழுதான்;
கற்போல நின்று பாசத்தால்
கர்த்தாவைச் சேவித்தான்.

*p* அவன் போல் அச்சங்கொள்ளினும்
நாமோ மெய்யன்பு கூர்ந்திலோம்;
பாவத்தால் வெட்கம் அடைந்தும்
கண்ணீர் சொரிந்திலோம்.

நாங்களும் உம்மை விட்டுமே,
பன்முறை மறுதலித்தும்,
நீர் எம்மைப் பார்த்து, இயேசுவே,
*p* நெஞ்சுருகச் செய்யும்.

இடறும் வேளை தாங்கிடும்;
உம்மைச் சேவிக்குங் காமும்,
உம்மை நேசிக்கும் நெஞ்சமும்
அடியார்க்கருளும். ஆமென்.

---

அப்போஸ்தலனாகிய பரிசுத்த யாக்கோபின் திருநாள்.

---

## 48 C. M. (310)

யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே
கொலை செய்தான்.

இளமை முதுமையிலும்
பட்டயந் தீயாலே
மரித்த பக்தர்க்காகவும்
மா ஸ்தோத்திரம், கர்த்தரே.

உம் நல்லழைப்பைக் கேட்டதும்
யாக்கோபப்போஸ்தலன்
*p* தன் தந்தை வீட்டை நீங்கியும்,
உம்மைப் பின்பற்றினன்.

மற்றிரு சீஷரோடுமே
யவீர் வீட்டுள் சென்றான்;
மகா மலைமேல் ஏறியே,
உம் மாட்சிமை கண்டான்.

p உம்மோடு காவில் ஜெபித்தும்,
உம் பாத்திரங் குடித்தான்;
ஏரோதால் மாண்டு மீளவும்
உம்மைத் தரிசித்தான்.

பூலோக இன்ப துன்பத்தை
மறந்து நாங்களும்,
விண் ஸ்தலம் நாட அருளை,
கர்த்தாவே, அளியும்.

p நாங்கள் உம் பாத்திரங் குடித்தால்
நீர் வரும் நாளிலே
f வாடாத கிரீடத்தை உம்மால்
அணிந்து கொள்வோமே. ஆமென்.

---

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பார்த்தொலோமேயுவின்
திருநாள்.

---

49 8787. D. (311)

கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.

தூயர் ராஜா, எண்ணிறந்த
வான்மீன் சேனை அறிவீர்;
மாந்தர் அறியா அநேகர்
உம்மைப் போற்றப் பெறுவீர்;
p எண்ணரிய பக்தர் கூட்டம்,
லோக இருள் மூடினும்,
f விண்ணின் ராஜ சமுகத்தில்
சுடர் போல விளங்கும்.

அந்தக் கூட்டத்தில் சிறந்த
ஓர் அப்போஸ்தலனுக்காய்

நாங்கள் உம்மைத் துதி செய்வோம்
வருஷா வருஷமாய்;
*p* கர்த்தர்க்காக அவன் பட்ட
நற் பிரயாசங் கண்டதார்?
*f* பக்தரின் மறைந்த ஜீவியம்
தேவன்தாமே அறிவார்.

*p* தாசரது ஜெபம், சாந்தம்,
பாடு, கஸ்தி யாவுமே
தேவ மைந்தன் புஸ்தகத்தில்
தீட்டப்பட்டிருக்குமே;
இவை உந்தம் பொக்கிஷங்கள்.
நாதா, அந்த நாளிலும்
*f* உம் சம்பத்தை எண்ணும்போது
எண்ணும் அடியாரையும். ஆமென்.

———

அப்போஸ்தலனாகிய பரி. மத்தேயுவின் திருநாள்.

**50** L. M. (312)

இயேசு...ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும்
ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் பின் சென்று வா என்றார்.

இதோ, உன் நாதர் செல்கின்றார்!
உன்னை அழைக்கும் அன்பைப் பார்!
*p* 'வீண்லோகம்விட்டென்பின்செல்வாய்'
என்றன்பாய்ச் சொல்வதைக் கேளாய்.

*p* துன்பத்தில் உழல்வோனே, நீ
மோட்சத்தின் வாழ்வைக் கவனி;
பற்றாசை நீக்கி, விண்ணைப்பார்,
*f* இதோ, உன் நாதர் செல்கின்றார்!

அவ்வழைப்பை இப்பக்தன்தான்
கேட்டே, செல்வத்தை வெறுத்தான்;
சீர் இயேசுவின் சிலுவைக்காய்
எல்லாம் எண்ணினான் நஷ்டமாய்.

நாடோறும் 'என்பின் செல்' என்னும்
அழைப்பு அவன் நெஞ்சிலும்,
உற்சாகத்தோடுழைக்கவே,
திடசித்தம் உண்டாக்கிற்றே.

*p* நாடோறும் நம்மைத் தேவன்தாம்
அழைத்துந் தாமதம் ஏனும்?
ஏன் மோட்ச வாழ்வைத் தள்ளுவோம்?
ஏன் லோக மாயை நாடுவோம்?

மத்தேயு பக்தன் போலவும்
எல்லாம் வெறுத்து நாங்களும்
நல்மனதோடு உம்மையே
பின்பற்ற ஏவும், கர்த்தரே. ஆமென்.

---

## பரிசுத்த மிகாவேல் முதலான சகல தேவதூதர்களின் திருநாள்.

---

**51** 8787. (313)

உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்.

*f* தந்தையின் பிரகாசமாகி
பக்தர் ஜீவனானோரே,
விண்ணோரோடு மண்ணோர் சேர்ந்து
உம்மைத் துதி செய்வாரே.

கோடாகோடித் தூதர் கூட்டம்
யுத்த வீர சேனைதான்;
வெற்றிக் குருசை கையில் தாங்கி
தூய மிகாவேல் நிற்பான்.

பட்டயத்தை ஓங்கித் துரோக
சேனை விண்ணின்றோட்டுவான்;
தேவ சத்துவத்தால் வலு
சர்ப்பத்தையும் மிதிப்பான்.

*p* தீய சேனே அஞ்சி ஓட,
நாங்கள் மோட்சஞ் சேரவும்
*f* எங்கள் போரில் விண்ணோர் துணை,
கிறிஸ்துவே, கடாட்சியும்.

*f* மா பிதாவாம் நித்திய ஜீவா,
மாண்டு உயிர்த்த மைந்தனே,
தூய ஆவியே, எந்நாளும்
ஸ்தோத்திரம் என்றும் உமக்கே.

———

ஆமென்.

சுவிசேஷகனுகிய பரிசுத்த லூக்காவின் திருநாள்.

## 52 C. M. (314)

சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச்சபைகளிலும் புகழ்ச்சி பெற்ற ஒரு சகோதரன்.

முன்னே சரீர வைத்யனும்
லூக்காவைத் தேவரீர்
ஆன்மாவின் சாநோய் தீர்க்கவும்,
கர்த்தாவே, அழைத்தீர்.

ஆன்மாவின் ரோகம் நீக்கிடும்
மெய்யான வைத்தியரே,
உம் வார்த்தையாம் மருந்தினுல்
நற்சுகம் ஈயுமே.

*p* கர்த்தாவே, பாவக்குஷ்டத்தால்
சா வேதனை யுற்றோம்;
உம் கரத்தால் தொட்டருளும்;
அப்போது சுகிப்போம்.

*p* ஆன்மாக்கள் திமிர்வாதத்தால்
மரித்துப்போயினும்

நீர் வல்ல வாக்கைக் கூறுங்கால்
திரும்ப ஜீவிக்கும்.

*p* தூர் ஆசை தீய நெஞ்சிலே
தீப்போலக் காயினும்,
உம் சாந்தச் சொல்லால் கோஷ்டத்தை
தணியச் செய்திடும்.

எத்தீங்கும் நீக்கும் இயேசுவே
நற்பாதம் அண்டினேம்;
உம் பூரண கடாட்சத்தால்
சுத்தாங்கம் பெறுவோம். ஆமென்.

---

அப்போ. பரி. சீமோன், பரி. யூதா ஆகிய
இருவருடைய திருநாள்.

---

**53** 878787 (315)

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட
விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடுங்கள்.

இயேசு ஸ்வாமி, சீமோன் யூதா
என்னும் உம் அப்போஸ்தலர்,
ஒன்று சேர்ந்து உமக்காக
உழைத்த சகோதரர்,
தங்கள் வேலை ஓய்ந்தபோதும்
வெற்றிக் கிரீடம் பெற்றனர்.

அவர்கள் உம் அருளாலே
நேசத்தோடு போதித்தார்;
சபையில் முற்காலம் பல
அற்புதங்கள் காண்பித்தார்;
மார்க்கக் கேடுண்டான வேளை
எச்சரித்துக் கண்டித்தார்.

*p* புசல் கொந்தளித்திப் போதும்
அன்பு குன்றிப் போயிற்றே;

விசுவாசம் மங்கி ஓஞய்
மந்தைமேல் பாய்கின்றதே;
ஒருவிசை ஒப்புவித்த
பக்தி காரும், கிறிஸ்துவே.

சீமோன், யூதா போன்ற உந்தம்
பக்தர் பல்லோருடனும்
பளிங்காழிமுன்னே நாங்கள்
உம்மைப் போற்றும் அளவும்
சாவுக்கும் அஞ்சாமல் உம்மை
பற்ற ஏவி அருளும்

*f* அற்புதங்கள் செய்யும் வல்ல
மா பிதாவே ஸ்தோத்திரம்,
நீதி சத்தியமும் நிறைந்த
மாந்தர் வேந்தே, ஸ்தோத்திரம்,
தூய ஆவியே, என்றைக்கும்
உமக்கெங்கள் ஸ்தோத்திரம்.

---

## சகல பரிசுத்தவான்களின் திருநாள்.

---

**54** 888888 (316)

அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து
இளைப்பாறுவார்கள்.

ஆ பாக்கிய தேவ பக்தரே!
உம் நீண்ட போர் முடிந்ததே;
வெற்றி கொண்டே, சர்வாயுதம்
வைத்து விட்டீர் கர்த்தா விடம்:
*f* சீர் பக்தரே அமர்ந்து, நீர்
*p* இயேசுவின் பாதத்தில் வாழ்வீர்.

ஆ பாக்கிய தேவ பக்தரே!
மா அலுப்பாம் பிரயாணத்தை
முடித்து, இனி அலைவும்

சோர்வும் இல்லாமல் வாழ்ந்திடும்:
*f* சீர் பக்தரே அமர்ந்து, நீர்
*p* நல் வீட்டில் இளைப்பாறுவீர்.

ஆ பாக்கிய தேவ பக்தரே!
இச்சீவ யாத்திரை ஓயவே,
இப்போதபாய புயலும்
உம்மைச் சேராது கிஞ்சித்தும்:
*f* சீர் பக்தரே அமர்ந்து, நீர்
*p* இன்பத்துறையில் தங்குவீர்

*p* ஆ பாக்கிய தேவ பக்தரே!
உம்மேனி மண்ணில் தூங்கவே,
*mf* மாண்பாய் எழும்புமளவும்
விழித்துக்காத்துக் கொண்டிரும்:
*f* சீர் பக்தரே மகிழ்ந்து, நீர்
'நம் ராஜா, வருவார்' என்பீர்.

கேளும், தூயோரின் தேவனே,
பரிந்து பேசும் மீட்பரே,
வாழ் நாள் எல்லாம், நல்லாவியே
கடாட்சம் வைத்து ஆளுமே:
*f* சீர் பக்தரோடு நாங்களும்
பாதீஸ் சேரச் செய்திடும்- ஆமென்.

---

பரிசுத்த ஸ்தேவானுடைய திருநாள்.

---

**55** 7777 (39)

நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.

முதல் ரத்தச் சாட்சியாய்
மாண்ட ஸ்தேவானே, கண்டாய்;
வாடாக் கிரீடம் உன்னதாம்
என்றுன் நாமங் காட்டுமாம்,

உன்றன் காயம் யாவிலும்
விண் பிரகாசம் இலங்கும்;
தேவதூதன் போலவே
விளங்கும் உன் முகமே.

*p* மாண்ட உன்றன் மீட்பர்க்காய்
முதல் மாளும் பாக்கியனாய்,
அவர் போல் பிதா கையில்
ஆவி விட்டாய் சாகையில்

கர்த்தர் பின் முதல்வனாய்
ரத்தப்பாதையில் சென்றாய்;
இன்றும் உன்பின் செல்கின்றார்
எண்ணிறந்த பக்தர், பார்!

*f* மா பிதாவே, ஸ்தோத்திரம்,
கன்னி மைந்தா, ஸ்தோத்திரம்,
வான்புறாவே, ஸ்தோத்திரம்,
நித்தம் நித்தம் ஸ்தோத்திரம். ஆமென்

---

பரிசுத்த யோவான் சுவிசேஷகனுடைய திருநாள்.

## 56 L M. (40)

இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்.

உம் அவதாரம் பாரினில்
கண்ணுற்ற பக்தனும் யோவான்,
தேவா, உம் சார்ந்த மார்பினில்
அன்பாகச் சாயவும் பெற்றான்.

சாவுறுந் தன்மை தேவரீர்
தரித்தும், திவ்விய வாசகன்
அநாதி ஜோதி ரூபம் நீர்
என்றே தெரிந்து கொண்டனன்.

கழுகைப்போல் வான் பறந்தே
மா ரகஸ்யம் கண்ணோக்கினான்;
நீர் திவ்விய வார்த்தையாம் என்றே
மெய்யான சாட்சி கூறினான்.

உம் அன்பு அவன் உள்ளத்தில்
பெருகி, பொங்கி வடிந்து,
அவன் நல் ஆகமங்களில்
இன்னும் பிரகாசிக்கின்றது.

*f* சீர் கன்னி மைந்தா, இயேசுவே,
பூலோக ஜோதியான நீர்,
பிதா, நல்லாவியோடுமே
என்றென்றுந் துத்தியம் பெறுவீர்.

—————

ஆமென்.

## குற்றமில்லாப் பாலகருடைய திருநாள்.

57 S. M. (41)

இவர்கள் மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

ஏரோதின் வாளினால்
இப்பாரின் சஞ்சலம்
விட்டே தூய் பாலர் மீண்டதால்,
கர்த்தாவே, ஸ்தோத்திரம்.

*p* பூலோகத்தீங்கினை
பட்டறியாதிவர்
தம் ரத்தம் மூழ்கி, அக்கரை
நினையாதேறினர்,

*f* உம்மால் மீட்புற்றோராய்
மா பாக்கியமாம் ஸ்தலம்
அடைந்த பாலர் யாவர்க்காய்,
கர்த்தாவே ஸ்தோத்திரம்.

*p* அப்பாலர் போலவே
மாசின்றி நாங்களும்
அஞ்சாமல் உம்மைக் காணவே
தூய்மை ஈந்தருளும்.

நாங்கள் உம் நேசத்தை
வாழ்நாளில் கூறியே,
*p* சாரோத்தில் உம் நாமத்தை
துதிக்க ஏவுமே. ஆமென்.

---

## கிறிஸ்து விருத்தசேதனத் திருநாள்

58 S. M. (42)

பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய எட்டாம் நாளிலே
அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள்.

பூர்வ பிரமாணத்தை
அகற்றி, நாதனார்
சிறந்த புது ஏற்பாட்டை
பக்தர்க்கு ஈகிறார்.

ஜோதியில் ஜோதியாம்
மாசற்ற பாலனார்
பூலோகப் பாவத்தால் உண்டாம்
நிந்தை சுமக்கிறார்.

*p* தம் பாலிய மாம்சத்தில்
கூர் நோவுணர்கிறார்;
தாம் பலியென்று ரத்தத்தில்
முத்திரை பெறுகிறார்.

தெய்வீக பாலனே
'இயேசு' என்று நீர்
மெய்ம் மீட்பராய் இந்நாளிலே
சீர் நாமம் ஏற்கிறீர்.

*f* அநாதி மைந்தனுய்,
விண் மாட்சிமையில், நீர்
பிதா நல்லாவியோடொன்ருய்
புகழ்ச்சி பெறுவீர். ஆமென்.

---

**59** 8787. (45)

## பிரசன்னத் திருநாள்.

யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில்
நீ சிறியதல்ல, என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு
உன்னிடத்திலிருந்து புறப்படுவார்.

பூமி மீது ஊர்கள் தம்மில்
பெத்லகேமே, சீர் பெற்ருய்;
உன்னில் நின்று விண்ணின் நாதர்
ஆள வந்தார் ராஜனுய்.

*p* தேவன் மனுடாவதாரம்
ஆனசெய்தி பூமிக்கு
தெரிவித்த விண் நக்ஷத்திரம்
வெய்யோனிலும் அழகு.

சாஸ்திரிமார்கள் முன்னணியில்
காணிக்கை படைக்கிருர்;
வெள்ளைப்போளம், தூபவர்க்கம்,
பொன்னுஞ் சமர்ப்பிக்கப்பார்!

தூபவர்க்கந் தெய்வங் காட்டும்,
பொன் நம் ராஜன் பகரும்,
*p* வெள்ளைப்போளம் அவர் சாவை
தெரிவிக்கும் ரகசியம்.

*f* புறஜாதியாரும் உம்மை
பணிந்த பிரகாரமே,
இன்று உம் பிரசன்னம் நாங்கள்
ஆசரிப்போம், இயேசுவே. ஆமென்.

## 60-ம் பாட்டு.

1 ஓ, தூங்காப் பரிசுத்தரே,
மா மங்காத் தூதர் சேனையே,
இசைபாடும், அல்லேலூயா!
பாடும் கர்த்தத்துவங்களே,
கேருபீம் சுரர் கூட்டமே,

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா,
அல்லேலூயா, அல்லேலூயா!

2 ஆ முற்பிதாக்கள் தீர்க்கர்காள்,
மா ஒய்வடைந்த பாக்யர்காள்,
கூடிப்பாடும், அல்லேலூயா!
பாடும் நீர் ரத்தச் சாட்சிகாள்,
மா ஜெயவீர சுத்தர்காள்,

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா,
அல்லேலூயா, அல்லேலூயா!

3 மகிழ் பாடும் கெம்பீரமாய்,
விண் கீத எதிரொலியாய்,
ஆ நண்பர்காள், அல்லேலூயா!
பிதா குமாரன் ஆவிக்கே,
பிரான், மூவராம் ஏகர்க்கே,

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா,
அல்லேலூயா, அல்லேலூயா! ஆமென்.

The
West Coast
Match Co.,
Press,
Sattur:-
36.